Press note no. 102 dt 6.10.08

<u>செய்தி வெளியீடு</u>

இன்று (6.10.2008) முற்பகல் 11.30 மணி அளவில் இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இலங்கைப் பிரச்சினை குறித்துப் பேசினார். அப்போது முதலமைச்சர் கலைஞர் அவர்கள் – இலங்கையில் நடைபெற்று வரும் இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கை, இனப்படுகொலை குறித்தெல்லாம் இந்தியப் பிரதமரிடம் விவரித்துவிட்டு; உடனடியாக மத்திய அரசு டெல்லியில் உள்ள இலங்கைத் தூதரை அழைத்து, இலங்கை தமிழினப் படுகொலை குறித்த கண்டனத்தை அவர் மூலமாக தெரிவித்திட வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார். தொடர்ந்து இலங்கையில் அமைதி காண்பதற்கான நடவடிக்கைகளையும், தமிழக மீனவர்களுக்கு இழைக்கப்படும் துன்பங்கள் தொடராமல் அவர்கள் பாதுகாக்கப்படுவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென்றும்; இந்தப் பிரச்சினைகள் அவசர அவசிய முக்கியத்துவம் வாய்ந்தவை என்றும் பிரதமரிடம் முதலமைச்சர் கலைஞர் குறிப்பிட்டார்.

மிகுந்த அக்கறையுடனும் கவலையுடனும் இந்தியப் பிரதமர் முதலமைச்சர் கலைஞர் அவர்களின் வேண்டுகோளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதி அளித்துள்ளார்.

* * * * *

Issued by:

DIPR, Chennai – 9.